செய்தி வெளியீடு எண்: 16/2018

நாள்: 10.01.2018

**வேலூர் மாவட்டத்தில் 13 சட்டமன்ற தொகுதிகளுக்கான இறுதி வாக்காளர் பட்டியலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்!**

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வேலூர் மாவட்டத்தில் உள்ள 13 சட்டமன்ற தொகுதிகளுக்கான இறுதி வாக்காளர் பட்டியலை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்.

இந்திய தேர்தல் ஆணையம் 01.01.2018ம் தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு சிறப்பு சுருக்க திருத்தம், 2018-இன் கீழ் வாக்காளர் பட்டியல் தயாரிக்க உத்தரவிடப்பட்டது. அதன்படி வேலூர் மாவட்டத்தில் 03.10.2017 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு, அன்று முதல் கடந்த 15.12.2017 வரையில் சுருக்க திருத்தங்களுக்கான படிவங்கள் கீழ்கண்டவாறு பெறப்பட்டது.

| படிவங்கள் விவரம் | பெறப்பட்ட படிவங்களின் எண்ணிக்கை | ஏற்றுக்கொள்ளப்பட்ட படிவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| படிவம் 6 | 26,961 | 24,224 |
| படிவம் 7 | 1,685 | 1,685 |
| படிவம் 8 | 8,366 | 8,366 |
| படிவம் 8A | 2,362 | 2,362 |
| மொத்தம் | 39,374 | 36,637 |

மேற்கண்டவாறு சுருக்க திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வேலூர் மாவட்டத்தில் 13 சட்டமன்ற தொகுதிகளுக்கான இறுதி வாக்காளர் பட்டியல் இன்று (10.01.2018) வெளியிடப்படுகிறது. இந்த இறுதி வாக்காளர் பட்டியலின்படி வாக்காளர்கள் எண்ணிக்கை விவரம் கீழ்வருமாறு:

| சட்ட மன்ற தொகுதியின் எண் மற்றும் பெயர் | ஆண் | பெண் | மூன்றாம் பாலினம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 38.அரக்கோணம்(தனி) | 105981 | 110285 | 18 | 216284 |
| 39.சோளிங்கர் | 127975 | 131025 | 0 | 259000 |
| 40.காட்பாடி | 113759 | 120707 | 18 | 234484 |
| 41.இராணிப்பேட்டை | 121003 | 128395 | 3 | 249401 |
| 42.ஆற்காடு | 121702 | 128058 | 0 | 249760 |
| 43.வேலூர் | 117513 | 124187 | 14 | 241714 |
| 44.அணைக்கட்டு | 114107 | 119400 | 2 | 233509 |
| 45.கீழ்வைத்தினான்குப்பம்(தனி) | 103766 | 106595 | 1 | 210362 |
| 46.குடியாத்தம்(தனி) | 130309 | 135945 | 15 | 266269 |
| 47.வாணியம்பாடி | 113150 | 113749 | 18 | 226917 |
| 48.ஆம்பூர் | 105332 | 109697 | 5 | 215034 |
| 49.ஜோலார்பேட்டை | 112451 | 113010 | 1 | 225462 |
| 50.திருப்பத்தூர் | 111608 | 111355 | 12 | 222975 |
| மொத்தம் | 1498656 | 1552408 | 107 | 3051171 |

மேற்கண்ட இறுதி வாக்காளர் பட்டியல் வேலூர் மாவட்டத்தில் உள்ள 1627 வாக்குச்சாவடி அமைவிடங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் வாக்காளர் பட்டியலை பார்வையிடலாம் என வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.தா.செங்கோட்டையன், வேலூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.செல்வராஜ், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திரு.நாராயணன், வட்டாட்சியர் திரு.சச்சிதானந்தன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், வேலூர்-9.

10/1/18.